DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.300/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : சிவசுப்பிரமணியன் (P.w.10 )

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6th day of February 2026

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை :-**

நான் தற்போது மதுரை திருப்பரங்குன்றத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வங்கியில் நகை மதிப்பீட்டளராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் கடந்த 2020ம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை ஒரு நாள் திருப்பரங்குன்றத்தில் நகை அடகு கடை நடத்தி வந்தேன். ஆஜர் எதிரிகள் இருவரும் எனது கடைக்கு வந்து தலா 2 பவுண் எடையுள்ள 2 தங்க செயின்களை அடகு வைத்துவிட்டு ரூ.1,20,000/- பணத்தை பெற்றுச் சென்றார்கள். 8 மாதம் கழித்து 2021ம் வருடம் திருச்சுழி காவல் நிலைய போலிசார் அடகு கடைக்கு வந்து

எதிரிகள் அடகு வைத்த 2 தங்க செயின்களும் திருட்டு நகை என்று கூறினார்கள். அதனால் அவர்கள் கேட்டுக் கொண்தற்கிணங்க நான் 2 தங்க செயின்களையும் திருச்சுழி காவல் நிலைய போலிசாரிடம் ஒப்படைத்தேன். அப்போது போலிசார் ஒரு செயின் திருச்சுழி காவல் நிலைய குற்ற எண் சம்பந்தப்பட்டது என்றும் ஒரு செயின் முக்குளம் காவல் நிலைய குற்ற எண் சம்பந்தப்பட்டது என்றும் கூறினார்கள். நகையினை கைப்பற்றி சென்றபோது ஆஜர் எதிரிகள் இருவரையும் மற்றும் இரண்டு நபர்களையும் அழைத்து வந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ. த.கு.வி :–**

நான் அடகு கடை நடத்தி வருவதற்கான உரிமம் எதுவும் காவல் துறை விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். போலிசார் விசாரணையில் நான் Business செய்வதாக கூறிவிட்டு தற்போது அடகு கடை வைத்துள்ளேன் என்று சாட்சியமளித்ததில் இருந்து போலிசார் என்னை விசாரிக்கவே இல்லை என்றால் சரியல்ல, நான் வேறு தொழிலும் செய்தும் அடகு கடையும் வைத்திருந்தேன். எனது அடகு கடையில் எத்தனை பேர் வேலை பார்க்கிறார்கள் என்றால் ஒரே ஒரு நபர் வேலை பார்க்கிறார். எனது கடை எந்த திசை நோக்கி உள்ளது என்றால் கோவிலுக்கு எதிர்திசையில் உள்ளது. எனது கடைக்கு அருகில் எத்தனை கடைகள் உள்ளன என்றால் 40, 50 கடைகள் உள்ளன. மோகன்தாஸ் மகன் ரகுராமன் என்பவரை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். முனியசாமி மகன் சந்தனவேலையும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரிகளை எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் போலிசார் கேட்டுக் கொண்டதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, அவர்கள்தான் நகையினை வைத்தார்கள். பொதுவாக

ஒரு புகைப்படத்தை காட்டி அதில் உள்ள நகையை போன்று செய்ய சொன்னால் எனக்கு செய்ய தெரியுமா என்றால் தெரியாது. நான் இவ்வழக்கின் நகையினை சொன்னதுபோல் போலிசாரிடம் ஆஜர் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் போலிசார் கேட்டுக் கொண்தற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.